1987 மார்ச் 25]

அந்த வறட்சி நிவாரணப் பணிகள் இருக்கின்றன. குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிற இடத்திலே, குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கான முயற்சிகள் எல்லாம் நடைபெறவேண்டும். ஆகவே எந்த ஒரு இடத்தையும், இது வறட்சிக்கு உரிய பகுதி, இது வளமான பகுதி என்று படத்தைப் போட்டு சரிக்கட்டி விட முடியாது. ஒரு பகுதி முழுவதும் வறட்சி என்று சொல்லிவிடவும் முடியாது. ஆனால் அப்படிப்பட்ட நிலைமையில், ஆங்காங்கு என்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ, அதை எடுக்கின்ற தன்மைதான் இருக்கிறது. பொதுவாகச் சொல்கிற போது, மேலெழுந்தவாரியாக நாம் சொல்கிறோமே தவிர, பொதுவாக தமிழ்நாடு முழுவதும் வறட்சியாக இருக்கிறது, பல்வேறு மாவட்டங்கள், பெரும்பாலான மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன, இன்னின்ன மாவட்டங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்று சொல்கிறோமே தவிர, கெசட் நோட்டிபிகேஷன் மூலமாக இது வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்று அறிவிக்கப்படுவதில்லை. எனவே நிவாரணப் பணிகள் அதற்கு ஏற்றாற்போல் எடுக்கப்பட்டு வருகின்றன.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை

160—(*வினா எண் 881)—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையை விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை அருகில் இருந்த தாலுக்கா அலுவலகம் புதிய வளாகத்திற்கு மாற்றப்பட்டு இருப்பதால், பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான அந்தப் பழைய தாலுக்கா அலுவலகக் கட்டிடம் மற்றும் உள்ள காலி இடங்கள் சேர்ந்து 2 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தை மருத்துவ மனை விரிவாக்கத்திற்கு எடுக்கவேண்டி, பொதுமக்கள் வேண்டு கோளின்படி, மாவட்ட மருத்துவ அதிகாரி, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதி, அது தற்போது பொதுப்பணித் துறையிடம் நிலுவையில் உள்ளது. இது குறித்து அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து, மருத்துவமனைக்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டு இருக்கிற 12 படுக்கைகள் கொண்ட கட்டிடத்தைக் கட்டி அந்த இடத்தைப் பெற்றுத்தர அரசு முயலுமா? அமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற இடம் பொதுப்பணித் துறைக்கு சொந்தம் என்று சொல்லு கிறார்கள். அதில் வருவாய் துறை அலுவலகம் இருந்து அதற்கு சொந்தம் என்று சொல்லுகிறார்கள். அதை வருவாய் துறையிட மிருந்து மருத்துவத் துறைக்கு மாற்றிக்கொடுத்தால் ஒழிய, அங்கே கட்டிடம் கட்ட இயலாது. அதுபற்றி அறிக்கை எதுவும் அரசுக்கு வரவில்லை. இதுபற்றிய விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்தால் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு கூட நமது மாநிலத்தில் ராசிபுரத் தினைப் பொறுத்து இப்படி ஒரு செயற்குறிப்பு இருந்து, அப்படி இட மாற்றம் செய்து கொடுத்து இருக்கிறார்கள், மருத்துவ மனையை விரிவு படுத்துவதற்கு. ஆகவே அதை முன் மாதிரியாகக் கொண்டு அந்த இடத்தில் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்து

1987 மார்ச் 25]

வதற்கு தமிழக அரசும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன் மாதிரி தேவையில்லை. மருத்துவமனையை விரிவுப்படுத்த வேண்டும் என்று சொன்னால் போதும். அந்த இடம் பொதுப் பணித்துறையின் இடமாக இருந்தாலும், வருவாய்த்துறையின் இடமாக இருந்தாலும், வேறு எந்த ஒரு துறையின் இடமாக இருந்தாலும் தேவைப்பட்டால் அந்தத் துறை இணக்கம் தெரிவித்தால் எடுத்துக்கொள்வதில் தவறு எதுவும் இல்லை.

கடையநல்லூர் அரசு மருத்துவமனை

161—(* வினா எண் 9183)—**திரு. தெ. பெருமாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகள் அதிகமாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அரசு மருத்துவமனையான இது குறைந்த படுக்கை வசதிகளைக் கொண்டதாக இருக்கிறது. இன்றையதினம் மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக ஏறத்தாழ 1 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை அங்கே இருப்பதால் அங்கே செல்லுகின்ற நோயாளிகள் அந்த ஆஸ்பத்திரியில் படுக்கை வசதி இல்லாமல் பாயிலும், தரையிலும் படுத்துக்கொண்டு சிகிச்சைப் பெற்று வருகிறார்கள்.